**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS
(~~குற்ற.வி.தொ.பிரிவு 154~~ இன் கீழ்) BNSS 173

C    8081020

1. District மாவட்டம் : கரூர்    PS: காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு    Year ஆண்டு : 2024    FIR No. மு.த.அ. எண் : 03/AC/2024    Date நாள் : 12.08.2024

2. (i) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988, AS AMENDED IN 2018.    Sections பிரிவுகள்: 7 (a)
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 07.08.2024    Date to : நாள் வரை காலை சுமார் 11.10 மணி. மாலை சுமார் 04.30 மணி.
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் 09.08.2024    Time to : நேரம் வரை காலை சுமார் 11.20 மணி.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.08.2024    Time : நேரம் 07.00 HRS
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.08.2024    Time : நேரம் 07.00 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ. கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் பேரூராட்சி அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. குமரேஷ்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V. வேலுச்சாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1997    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் சேல்ஸ்மேன்    (g) Address : முகவரி முத்தாலம்மன் கோவில் தெரு, பூவம்பாடி -கிராமம். கிருஷ்ணராயபுரம் (T.K) கரூர் -மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1, ராஜகோபால். E.O. பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் பேரூராட்சி.
   2. சிவக்குமார், கிளார்க். பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் பேரூராட்சி, கிருஷ்ணராயபுரம் வட்டம். கரூர் -மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக, ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V Kumaresh 12.08.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

12/08/2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12.08.2024 .AT 10.00 HRS

Name: பெயர் P. தங்கமணி
Rank: நிலை ஆய்வாளர் I.No. எண் .........
உ.த.த. பிரிவு
தேனி.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.03/AC/2024 u/s 7(a) of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் P.தங்கமணி ஆகிய நான் 12.08.2024 ஆம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது V.குமரேஷ், வயது.25, த/பெ.V.வேலுசாமி, முத்தாலம்மன் கோவில் தெரு, பூவம்பாடி கிராமம், கிருஷ்ணராயபுரம் (TK), கரூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி ஒரு கணினியில் தட்டச்சு செய்த எழுத்துமூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் V.குமரேஷ், வயது.25, த/பெ.V.வேலுசாமி, முத்தாலம்மன் கோவில் தெரு, பூவம்பாடி கிராமம், கிருஷ்ணராயபுரம் (TK), கரூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம், கரூர் மாவட்டம்.

நான் தற்போது கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தாலுகா சேங்கல் அருகே உள்ள பூவம்பாடி கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் ஜவுளிக்கடையில் சேல்ஸ் மேனாக வேலை செய்து வருகிறேன். எனது தாயார் சந்திரா கடந்த 20 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். எனது தந்தை எங்கள் ஊரைச்சார்ந்த பாண்டியன் என்பவரின் விவசாய நிலத்தில் தங்கி 20 வருடங்களாக விவசாய கூலி வேலை செய்து வந்தார். பாண்டியன் அவர்கள் எனது தந்தையின் மீது இருந்த நம்பிக்கை காரணமாக அவரது பெயரில் இருந்த விவசாய நிலத்திலிருந்து 3 செண்ட் காலி நிலத்தை எனது தந்தைக்கு தானமாக கொடுத்து, அந்த மனைநிலத்தில் வீடு கட்டிக்கொள்ளும்படி வாய்மொழியாக சொன்னார். அதன்பேரில் எனது தந்தையும் கடந்த 2020 ஆம் வருடம் வீட்டை கட்டி முடித்தார். எனது தந்தை வீடு கட்டி முடித்ததும், அந்த நிலம் எனது தந்தை பெயருக்கு மாற்றாமல் பாண்டியன் அவர்களின் பெயரிலேயே இருந்ததால், வீட்டின் மின் இணைப்பையும் பாண்டியன் அவரது பெயரிலேயே வாங்கி கொடுத்தார். அந்த வீட்டில் நானும், எனது தந்தையும் வசித்து வந்தோம். இதற்கிடையில் கடந்த பிப்ரவரி 2023-ல் எனது தந்தை உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். அதன் பிறகு பாண்டியன் அவர்கள் ஏற்கனவே உறுதி அளித்ததுபோல் கடந்த 8.1.2024-ந்தேதி அந்த மனைநிலத்தை எனது பெயரில் கிருஷ்ணராயபுரம் பத்திர பதிவு அலுவலகத்தில் தானசெட்டில்மெண்ட் செய்து கொடுத்தார். நான் குடியிருக்கும் வீட்டிற்கு இதுவரை சொத்து வரி நிர்ணயம் செய்யாமல் இருந்தது. அதனால் நான் கடந்த 27.7.2024-ந்தேதி பழைய ஜெயங்கொண்டம் பேரூராட்சி அலுவலகத்திற்க்கு சென்று கிளர்க் சிவக்குமார் அவர்களிடம் எனது வீட்டிற்கு சொத்து வரி நிர்ணயம் செய்ய எழுத்து மூலமாக மனு கொடுத்தேன். அந்த மனுவுடன் தானசெட்டில்மெண்ட் பத்திர நகலையும் இணைத்து கொடுத்தேன். எனது மனுவை அவர் வாங்கிக்கொண்டு மூன்று நாட்கள் கழித்து எனது வீட்டிற்கு வந்து அளந்து அதன்பிறகு சொத்து வரி நிர்ணயம் செய்ய ஏற்பாடு செய்வதாக சொன்னார். அதேபோல், அவர் மூன்று நாட்கள் கழித்து 31.7.2024-ந்தேதி மதியம் சுமார் 3 மணியளவில் எனது வீட்டிற்கு வந்து

வீட்டை அளந்தார். அப்போது நானும் உடன் இருந்தேன். வீட்டை அளந்து முடித்ததும் எனது செல்போன் எண்ணை வாங்கிக்கொண்டு அவர் கூப்பிடும் போது அலுவலகத்திற்கு வரும்படி சொல்லி விட்டு சென்றுவிட்டார். ஆனால் அவர் என்னை தொடர்பு கொள்ளாததால் நான் 7.8.2024-ந்தேதி காலை சுமார் 11.10 மணிக்கு பழைய ஜெயங்கொண்டம் பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று கிளார்க் சிவக்குமார் அவர்களை சந்தித்து எனது பெயரில் சொத்து வரி நிர்ணயம் செய்ய நான் கொடுத்த மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைப்பற்றி அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் சும்மா நடந்துகொண்டிருந்தால் வேலை ஆகாது ஏதாவது கவனிக்க வேண்டும் என்றும் அவர்தான் பைல் ரெடி பண்ணி இ.ஓ-க்கு அனுப்ப வேண்டும் என்றும் சும்மா ஒன்னும் செய்ய முடியாது என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் நானே சிரமத்தில் இருக்கிறேன் இ.ஓ-வை பார்த்து கேட்கட்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் போய் பார் என்று சொன்னார். நான் இ.ஓ ராஜகோபால் அவர்களை சந்திக்க சென்ற போது அவர் அவசர வேலையாக வெளியே சென்றதால், என்னால் அவரை சந்திக்க இயலவில்லை. அதனால் நான் வீட்டிற்கு சென்றுவிட்டு அன்று மாலை சுமார் 4.30 மணிக்கு இ.ஓ-வை அவரது அலுவலகத்தில் சந்தித்து சார் எனது வீட்டிற்கு சொத்துவரி எவ்வளவு வரும் சார் என்று கேட்டேன். அதற்கு அவர் எஸ்டிமேட் போட்டு பார்த்துவிட்டு சொல்வதாகவும், அவரை தனியாக கவனிக்க வேண்டும் என்று சொன்னார். நான் புரியல சார் என்று சொன்னேன். அதற்கு அவர் எவ்வளவு தொகை செலவாகும் என்று கிளார்க் சிவக்குமாரிடம் சொல்லிவிடுவதாகவும், இரண்டு நாட்கள் கழித்து தனக்கு போன் செய்விட்டு வருமாறு சொல்லி அனுப்பினார். அப்போது கிளார்க் சிவக்குமார் அலுவலகத்தில் இல்லை. அதன்படி இரண்டு நாட்கள் கழித்து 9.8.2024 அன்று காலை சுமார் 8 மணிக்கு எனது செல்போன் எண்.6380350712-லிருந்து இ.ஓ செல்போன் எண்-8925809632-க்கு தொடர்பு கொண்டு பேசியபோது, அவர் அலுவலகத்திற்கு வந்து அவரை சந்திக்குமாறு சொல்லிவிட்டு இணைப்பை துண்டித்துவிட்டார். அதன்பேரில் நான் அன்று காலை சுமார் 11.00 மணிக்கு பேரூராட்சி அலுவலகம் சென்று இ.ஓ-வை பார்த்தபோது அவர் எவ்வளவு தொகை கட்ட வேண்டும் என்று கிளார்க் சிவக்குமாரிடம் சொல்லிவிட்டதாகவும், அதனால் அவரை போய் பார்க்கும் படி சொன்னார். உடனே நான் கிளார்க் சிவக்குமாரை பார்த்தபோது அவர் வேலையாக இருப்பதாகவும் கால் மணி நேரம் கழித்து வரும்படி சொன்னார். அதனால் நான் அலுவலகத்தைவிட்டு வெளியே சென்று காத்திருந்துவிட்டு பின்னர் காலை சுமார் 11.20 மணிக்கு மீண்டும் கிளார்க் சிவக்குமார் அவர்களை சந்தித்தபோது அவர் மொத்தமாக ரூ.30,000/- கொடுத்துவிட்டால் எனது வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்து கொடுத்துவிடுவதாக சொன்னார். அவ்வளவு தொகை என்னால் கட்ட முடியாது கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் சார் என்றும், அதில் ஆபிசுக்கு கட்ட வேண்டிய பணம் எவ்வளவு சார் என்றும் கேட்டதற்கு, அவர் ஆபிஸிற்கு ரூ.13,000/- வரை கட்ட வேண்டும் என்றும், ரூ.17,000/- தனியாக கொடுக்க வேண்டும்

என்றும் சொன்னார். அதற்கு நான் வேண்டுமானால் இ.ஒ.வை பார்த்து பணத்தை குறைத்து கேட்கட்டுமா சார் என்று கேட்டதற்கு, அவர் போய் பார் என்று சொன்னார். உடனே நான் இ.ஒ விடம் சென்று கிளார்க் சிவக்குமார் ரூ.30,000/- கேட்டதைப்பற்றி சொன்னபோது, அவர் கேட்ட பணத்தை சீக்கிரம் கொடுத்துவிட்டு வேலையை முடித்துக்கொண்டு போ என்று சொன்னார். நான் அவரிடம் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணத்தை தயார் செய்து கொண்டு திங்கள் கிழமை அலுவலகம் வருமாறு கறாராக சொல்லிவிட்டார். எனது வீட்டிற்கு சொத்து வரி நிர்ணயம் செய்ய பழைய ஜெயங்கொண்டம் பேரூராட்சி அலுவலகத்தில் ரூ.13,000/- வரை செலுத்த வேண்டிய தொகை போக, இ.ஒ மற்றும் கிளார்க் சிவக்குமார் ஆகிய இருவரும் லஞ்சமாக கேட்ட ரூ.17,000/-த்தை கொடுத்து சொத்து வரி இரசீது பெற விருப்பமில்லை. எனக்கு இரண்டு நாட்களாக உடல் நிலை சரியில்லாததால் உடனே வந்து என்னால் புகார் கொடுக்க முடியவில்லை. எனக்கும் அவர்கள் இருவருக்கும் வேறு கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை. எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட அவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (V.குமரேஷ்) 12/08/2024.

Sir, Received the computer typed complaint on 12.08.2024 at about 07.00 hrs,. a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and the reputation of the accused A-1 and A-2 were found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.03/AC/2024 u/s 7(a) of the PC Act, 1988 as amended in 2018 at 07.30 hrs on 12.08.2024. Sd/-(xxxxxxxx) 12.08.2024. P.Thangamani, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original Computer typed complaint of Tr.V.Kumaresh, S/o.(late)Tr.V.Velusamy, Muthalamman Kovil Street, Poovampadi Village, Krishnarayapuram (Tk), Karur are submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(P.Thangamani)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.